## மஹவலி வென்ஷர் கப்பிட்டல் (தனியார்) கம்பனி – 2016 ஆம் ஆண்டு

மஹவலி வென்ஷர் கப்பிட்டல் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமைத்தில் மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமையின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.4 **கம்பனி உருவாக்கம்**

1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க 1987 மார்ச் 18 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் தனியார் கம்பனியொன்றாக 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த இக்கம்பனி 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் 2008 திசெம்பர் 01 ஆந் திகதி மீண்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

1.5 **கம்பனியை கலைத்தல்**

2012 ஆகஸ்ட் 13 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் பரிந்துரையின் பிரகாரம், அவ்வாண்டின் திசெம்பர் மாதம் இறுதியில் கம்பனி சுயமாகவே கணக்குகளைத் தீர்த்து மூடுவதற்கு 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2014 நவம்பர் 20 ஆந் திகதிய விஷேட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியை கலைப்பதற்காக கலைப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். கம்பனி தன்னிச்சையாக கணக்குகளை தீர்த்து மூடுவதற்கு முதலில் தீர்மானிக்கப்பட்ட போதிலும், பின்னர் அச்செயற்பாடு கடன்கொடுத்தோரின் கணக்குகள் தீர்க்கப்பட்டு மூடப்பட்டிருந்ததாக கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் 2016 யூலை 25 ஆந் திகதிய பீரீ 9854 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. இக்கடிதத்தின் பிரகாரம் கடன்கொடுத்தோருக்கு கூட்டமொன்று நடாத்தப்பட்டு எதிர்கால நடவடிக்கைகளை செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான கூட்டமொன்று நடாத்தப்பட்டமைக்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 17 ஆந் திகதி வரையிலும் கம்பனி கலைப்பு நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

1.6 **மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக மஹவலி வென்ஷர் கப்பிட்டல் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிரயாமாகும்.

### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான அசகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

------------------------------------------------------------------------

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

------------------------------------------------

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு உரித்தாக கொண்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலைப்பதற்கு உள்ள கம்பனியொன்றின் அனைத்து சொத்துக்களின் தற்போதைய தேறிய பெறுமதி நடைமுறைச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், சொத்துக்கள் குறைத்தெழுதிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரி முறிகள் முதிர்வடைதல் அறிவித்தலின் பிரகாரம் வட்டி வருமானம் ரூபா 854,773 ஆக இருந்த போதிலும், வருமானக் கூற்றில் ரூபா 908,537 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 53,764 ஆல் வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பெயரளவு வரி விலக்கு (Notional Tax Credit) ரூபா 5,377 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) திறைசேரி முறிகள் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்திலேயே அதற்குரிய வட்டி தீர்வையாகி இருக்கையில் கிடைக்க வேண்டியவ ட்டியாக ரூபா 174,924 குறிப்பிடப்பட்டிருந்ததுடன் முன்னராக பெற்ற வட்டி வருமானம் ரூபா 25,842 பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திறைசேரி முறிகள் முதிர்வடையும் அறிவித்தலின் பிரகாரம் திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா 9,797,800 ஆக இருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 9,839,619 ஆக காட்டப்பட்டமையால் சொத்துக்கள் ரூபா 41,819 ஆல் கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

------------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | அலுவலக உபகரணங்கள் | 1,346,930 | நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | மோட்டார் வாகனங்கள் | 116,303 | |
| (இ) | தளபாடமும் பொருத்திகளும் | 149,604 | பெறுமதி மற்றும் பௌதீக இருப்பு தொடர்பாக உறுதிப்படுத்தல் ஆவணங்கள் |
| (ஈ) | சிங்கர் தையல் இயந்திரம் | 29,480 | |
| (உ) | | 2,614,327 | கடன் உடன்படிக்கை கடன் கோவைகள் |
| (ஊ) | கடன் முதலீடு – செயற்திட்டம் | 3,403,850 | |
| (எ) | வியாபாரக் கடன் பதிவழித்தல் (தொங்கல்) | 1,994,933 | கடன் ஆவணங்கள் மற்றும் கடன் பதிவழிப்பதற்கான அங்கீகாரம் |
| (ஏ) | ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக்கடன் | | |
| | (i) ஈ.ஈ.சீ செயற்திட்டங்கள் | 1,368,863 | |
| | (ii) ஏனைய செயற்திட்டங்கள் | 1,952,190 | |
| (ஐ) | கிடைக்க வேண்டிய வருமான வரி | 310,025 | மீதி உறுதிப்படுத்தல்கள் ஆவணங்கள் |
| (ஒ) | வியாபார மற்றும் செலுத்த வேண்டியவைகள் (டொலமைட் செயற்திட்டம்) | 27,601 | உரிய குத்தகை ஆவணங்கள் மற்றும் பெறுமதி உறுதிப்படுத்தலுக்குரிய ஆவணங்கள் |

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக இருந்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 3,000,473 பெறுமதியான கிடைக்க வேண்டிய 04 கடன் மீதிகள் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுக்கு இணங்காமை

1979 இன் 23 ஆம் இலக்க மஹாவலி அதிகாரசபை சட்டத்தின் 42(1) பிரிவின் பிரகாரம் ரூபா 100 ஆன சாதாரண பங்குகளினால் கம்பனியின் மூலதனம் காணப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இக்கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபா 10 ஆன 3,000,000 பங்குகளைக் கொண்டிருந்தன. அதில் 1,039,800 பங்குகள் இலங்கை மஹாவலி அதிகார சபைக்கும் மூன்று பங்குகள் ஏனைய வெளித்தரப்பினருக்கும் வழங்கப்பட்டிருந்த போதிலும், வெளிநபர்களுக்கு வழங்கப்பட்ட பங்குகளின் அளவு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 786,671 ஆன இலாபமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 135,108 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 921,779 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 396,237 ஆல் அதிகரித்தமை மற்றும் செலவினம் ரூபா 124,893 ஆல் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

4. செயற்பாட்டு முகாமைத்துவம்

4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி தன்னிச்சையாக கணக்குகளைத் தீர்த்து மூடுவதற்காக 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு கலைக்கும் நடவடிக்கைகள் மற்றும் கணக்குகளைத் தயாரிப்பதற்காக ரூபா 125,000 கொடுப்பனவு செய்வதற்கு இனங்கப்பட்டிருந்தது. இணங்கிய தொகையில் 50 சதவீதமாக ரூபா 62,500 தொகை 2015 சனவரி 13 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் கணக்குகளை தயாரிப்பதற்காக மீண்டும் ரூபா 38,500 தொகை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

கணக்காய்வு நடவடிக்கைகள் 2018 மார்ச் மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கலைப்பு கட்டணங்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் கட்டணங்களை கொடுப்பனவு செய்வதற்கான பெற்றுக்கொண்ட வங்கிகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ஐக்கிய இராச்சியத்தின் கொழும்பு உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குரிய கிரயம் ரூபா 116,303 தொகையான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் உருக்குலைந்து இருந்ததுடன் லேண்ட் லோடர் மோட்டார் வண்டி ஜாவத்த மஹாவலி பாதுகாப்பு படையணி தொகுதி வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் கம்பனியின் கலைப்பு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.